Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 356/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌடீஸ்வரி | ஜாதி | : | |
| க/பெ | : | பாஸ்கரன் | தொழில் | : | ஆசிரியர் |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டி, செட்டியபட்டி பிரிவு, அக்சயா முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.07.2016 ஆம் தேதி நான் பணிபுரியும் நிலக்கோட்டை பள்ளியில் இருந்து 04.30 மணிக்கு அரசு பேருந்தில் ஏறி செட்டியபட்டி பிரிவில் இறங்கி எனது வீட்டிற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது மாலை 05.40 மணிக்கு ஜெயசீலன் வீட்டிற்கு அருகில் உள்ள சந்தில் இருந்து இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஒருவர் ஹெல்மட் அணிந்திருந்தார், மற்றொருவர் ஒல்லியான உடல்வாகுடன் இருந்தார், அவருக்கு 35 வயது இருக்கும். அந்த 35 வயது மதிக்கத்தக்க நபர் என்னை கீழே தள்ளிவிட்டு, கழுத்தில் நான் அணிந்திருந்த 6 3/4 பவுண் செயினை அறித்து எடுத்துவிட்டு, வண்டியில் ஏறி சென்றுவிட்டார், நான் கத்தினேன். அருகில் இருந்தவர்கள் வந்தார்கள், அவர்கள் வருவதற்குள் இருவரும் ஓடிவிட்டார்கள். அதன்பின்பு எனது கணவர் வந்தார். அவர் வந்தவுடன் நான் சின்னாளபட்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் . தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு சின்னாளபட்டி காவல் நிலையத்தில் நான் கொடுத்தது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1/ PW.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வீட்டிற்கு வந்த சின்னாளபட்டி போலிசார் என்னிடம் காட்டினார்கள். இதை வாங்கிகொள்வதற்கு சம்மதமா என்று கேட்டார்கள். நான் வேண்டாம் என்று திரும்பி அனுப்பிவிட்டேன். அதன்பின்னிட்டு திண்டுக்கல் நீதிமன்றத்தில் மனு

செய்தேன். இரண்டு பவுன் செயினை இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றேன். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகைப்பத்தில் காட்டப்படும் செயினை தான் நீதிமன்றத்தில் பெற்றுச் சென்றேன். அந்த செயின் உள்ள புகைப்படம் (எண்ணம்-3) **(அ.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படைத்தை காட்டும் மென்பொருள் தகடு (CD) **(அ.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் செயினை பறித்துச் சென்ற நபரை எனக்கு ஞாபகமில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும், உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நான் சாட்சி சொல்லும் இடத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு வலது புறம் உள்ள டீ கடை தூரம் வரை இருக்கும். மதுரை-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை ரோட்டிற்கு மேற்குபுறமாக இறங்கி தான் உங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நீங்கள் பஸ்சில் இருந்து இறங்கும் இடத்தில் இருந்து தெற்கு நோக்கி சென்று திரும்பவும் மேற்கு நோக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நீங்கள் பஸ்சில் இருந்து இறங்கி வீட்டிறகு செல்லும் வழியில் பேக்கரி, மற்றும் கடைகளில் கேமராக்கள் உள்ளது என்றால் சம்பவம் நடந்த வருடமான 2016 ல் அந்த இடத்தில் கேமராக்கள் இல்லை, தெற்குபுறமாக பாண்டி என்பவரின் வீடு மட்டும் இருந்தது, மற்ற இடங்கள் காலி மனைகளாக இருந்தது.

நீங்கள் பஸ்சில் இருந்து இறங்கி வரும் வழியில் அக்சயா நகர் உரிமையாளர் சார்பாக கண்காணிப்பு கேமராக்கள் அப்போதே பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நீங்கள் பஸ்சில் இருந்து இறங்கி முதலாவது தெரு வழியாக செல்ல வேண்டும் என்றால் லட்சுமணன் என்பவரின் வீட்டை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் ஒரு வீடு உள்ளது, அது லட்சுமணன் வீடா என்று எனக்கு தெரியாது, அதற்கு அடுத்து ஜெயசீலன் வீடு உள்ளது. லட்சுமணன் வீட்டில் கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அக்சயா நகர் முதல் தெருவில் இருந்து மதுரை ரோட்டில் போக்குவரத்து விதிமுறைகளுக்கு மாறாக தெற்கு நோக்கி பயணிக்கும் போது சின்னாளபட்டிக்கு செல்லக்கூடிய பைபாஸ் சந்திப்பில் காவல்துறையினரால் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் உள்ளது என்றால் கேமராக்கள் இல்லை. உங்களிடம் இருந்து முழு செயினும்

அறுத்து எடுத்தார்களா அல்லது பாதி செயினை மட்டும் அறுத்தார்களா என்றால் முழு செயினையும் அறுத்து எடுத்துச் சென்றார்கள். எதிரிகள் வந்ததாக சொல்லும் வாகனத்தின் பதிவெண் என்னவென்றால் நான் சம்பவத்தின் போது கீழே விழுந்துவிட்டேன், என்னால் கவனிக்க இயலவில்லை.

புகாரில் பல்சர் வண்டி, 150 CC பிளாக் கலர் என்று கூறியுள்ளீர்கள் என்றால் அருகில் எதிர் திசையில் வந்தவர்கள் பார்த்துவிட்டு சொன்னதன் பேரில் நான் புகாரில் வண்டியை பற்றி குறிப்பிட்டிருந்தேன். எவ்வளவு நேரம் கழித்து நீங்கள் புகார் கொடுத்தீர்கள் என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தீர்காளா அல்லது மறுநாள் புகார் கொடுத்தீர்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அருகில் உள்ள சின்னாளபட்டி காவல் நிலையத்தில் அப்போதே புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல.

அருகில் இருந்தவர்களிடம் எதிரிகள் வந்ததாக சொல்லும் வாகனத்தின் எண்ணை நீங்கள் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் வாகன எண்ணை எங்கள் குடும்பத்தார்கள் சொல்லியிருக்கலாம், நான் பதட்டமாக இருந்தேன். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், சம்பவம் நடைபெறாததால் தான் நீங்கள் மறுநாள் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அருகில் உள்ள நபர்களிடம் விசாரித்தும் வாகன எண்ணை தெரியாது என்று சொல்லிவிட்டார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 356/2023**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாஸ்கரன் | ஜாதி | : | |
| த/பெ | : | ராமசாமி | தொழில் | : | வங்கி ஊழியர், ஓய்வு |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டி, செட்டியபட்டி பிரிவு, அக்சயா முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் வங்கியில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 06.07.2016 ஆம் தேதி நானும், எனது மகனும் பேசிக்கொண்டிருந்தோம். எனது மனைவி பள்ளி முடிந்து வரும் நேரமாகியும் வரவில்லை. நான் வெளியே வந்து பார்த்தபோது மாலை 05.25 மணி சுமாருக்கு சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது எனது மனைவி கீழே விழுந்து எழுந்தார். நான் ஓடி சென்று என்னவென்று விசாரித்தபோது, ஜெயசீலன் வீட்டின் அருகில் உள்ள சந்திற்குள் இருந்து இரண்டு நபர்கள் வந்தார்கள். ஒருவர் ஹெல்மட் அணிந்திருந்தார், மற்றொருவர் என்னை கீழே தள்ளிவிட்டு எனது 6 3/4 பவுண் நகையை பிடிங்கி சென்றுவிட்டதாக சொன்னார். அதன்பிறகு சின்னாளபட்டி போலிசுக்கு போன் செய்தேன். அவர்கள் வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்தம் கேட்டு ஓடி வந்து அவர்கள் சொன்னதை தான் நீங்கள் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தீர்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி நேரடியாக உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் எண் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததற்கு பிறகு நீங்கள்

காவல் நிலைத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் நாங்கள் சொல்லி மட்டும் வைத்திருந்தோம், காவல் நிலையத்தில் இருந்து வந்து புகாரை பெற்றுச் சென்றார்கள்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor